1973 ஆகஸ்ட் 14]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சின்கோனா கார்பரேஷன் ஆரம்பிக்க கொள்கை அளவில் ஏற்கப்பட்டு மாதங்கள் 2 ஆகின்றன.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் லத்தீப் அவர்கள் அடிக்கடி சொல்வது, ஜவ்வாது மலையில் மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றன என்பது. ஆகவே, உதகையிலே இருப்பதைப் போல் ஜவ்வாது மலையிலும் செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது என்றாலே வாசனைத் திரவியம்தான். கலெக்டரிடத்திலே ஆலோசனை பெறப்பட்டு இயக்குநருடைய ஆலோசனையில் இருக்கிறது. இப்பொழுது பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

மேட்டூர் நகருக்கு மின் சக்தி வழங்கல்

*146 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரத்தில் மாலை வேளைகளில் வோல்டேஜ் குறைவு காரணமாக டியூப் லைட்டுகள் எரியாமலும் மற்ற பல்புகள் மங்கலாகவும் எரிவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) மேட்டூர் அணை-மருத்துவமனைக் குடியிருப்பில் ஒரே மின்னோட்ட நிலையில் வழங்கும் முறை மாறி இப்போது 3 மின்னோட்ட நிலையில் 4 கம்பித் தொடர்களில் மின்சாரம் வழங்கப்பட்டு மின் சுமைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இப்போது 'வோல்டேஜ்' நிலை திருப்திகரமாயுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : மின்சார உற்பத்தி மேட்டூரிலே இருந்தும், கூட, இதுபோன்று அவ்வப்போது ஏற்படுவது அங்கே வாழ்கின்ற மக்கள் அவ்வளவு பேருக்கும் மிகவும் வேதனை அளிக்கிறது. இன்னும் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, வேறு சில இடங்களிலே இதேபோல் நிலை இருக்கிறது. அம்மாதிரி நிலையை மாற்ற அரசு உடனே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, வோல்டேஜ்ஜை இம்ப்ரூவ் செய்வதற்காக 'High tension capacitors'. சப்-ஸ்டேஷன்களிலே நிறுவவேண்டுமென்ற விரிவான திட்டத்தின் அடிப்படையில் எல்லாப் பகுதிகளிலும் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.